

TEMASEK

# மீண்டெழுங்கள் முன்னோக்குடன்

## கொவிட்-19 பாதிப்பைக் கடந்துசெல்ல பெரும் முனைப்புகள்

கொவிட்-19 கிருமிப்பரவலைச் சமாளிக்கவும், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கவும், தெமாசெக் அறநிறுவனத்தோடும் மற்றவர்களோடும் கூட்டிணைந்து பெரும் முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டன



### StayMasked

சிங்கப்பூரில் தானியங்கி விநியோக இயந்திரங்களின் வாயிலாக நுண்ணுயிரிகளை எதிர்க்கவல்ல **30 மில்லியனுக்கும் மேலான** மறுபயனீட்டு முகக்கவசங்கள் விநியோகிக்கப்பட்டன



### #BYOBclean

சிங்கப்பூரிலுள்ள வீடுகளுக்கு கை சுத்திகரிப்பான்கள்

போத்தல்களை மறுபயனீடு செய்து, பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைப்பதற்காக, “சொந்த போத்தலை எடுத்துச் செல்லுங்கள்” *(BYOB)* எனும் நீடித்த நிலைத்தன்மை கொள்கை செயல்படுத்தப்பட்டது

SG UNITED



### சமூகப் பரிசோதனை

அன்றாட வேலையின்போது பலரையும் சந்திக்கும் உணவங்காடிக் கடைக்காரர்கள், துப்புரவாளர்கள், உணவு விநியோகிப்பாளர்கள் போன்ற ஊழியர்களுக்கு **200,000க்கும் மேலான** கொவிட் பரிசோதனைகளைச் செய்ய துணை புரியப்பட்டது



### வைட்டமின் D விநியோகம்

பலவீனமான குடும்பங்கள், மூத்தோர்கள், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு **100,000க்கும் மேலான** வைட்டமின் D3 போத்தல்கள் வழங்கப்பட்டன



### தானியக்க கொவிட்-19 பிசிஆர்* பரிசோதனை

நோய்க்குறியியல் ஆய்வுக்கூடங்களுடன் கூட்டிணைந்து, **ஒரு மில்லியனுக்கும் மேலான** பிசிஆர் பரிசோதனைகள் தானியக்கமயமாக்கப்பட்டன

* பல்படியத் தொடர் வினை *(Polymerase Chain Reaction)*

### oscar@sg நிதி

கொவிட்-19 கிருமிப்பரவலால் பாதிப்படைந்த சமூகங்களுக்கு சேவை வழங்கும் **200க்கும் மேலான** அடித்தளத் திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டது

**கொவிட்-19 கிருமிப்பரவலால் பாதிப்படைந்த சமூகங்களுக்கு ஆதரவளிக்கும் திட்டப்பணியை oscar@sg நிதிக்குப் பரிந்துரைக்க வருடுங்கள்**



### Morning Star-இல் இரவுநேரப் பராமரிப்பு

வேலை செய்யும் பெற்றோர்களுக்கு ஓய்வளிக்க, பிள்ளைகளுக்கு மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இலவச இரவுநேரப் பராமரிப்பு வழங்குகிறது



### VintageRadio.SG

மூத்தோருக்காக அக்காலப் பாடல்கள் போன்ற பன்மொழி உள்ளடக்கங்களைத் தொகுத்தளிக்கும் லாப நோக்கற்ற மின்னிலக்கச் செயலி

### அனைத்துலக உதவிக்கரம்

தெமாசெக் அறநிறுவனம் சிங்கப்பூருக்கு வெளியே சுமார் 40 நாடுகளுக்கு கொவிட்-19 தொடர்பான பொருட்களை வழங்கியிருக்கிறது

**ஒரு மில்லியனுக்கு மேலான** பரிசோதனைகளைச் செய்வதற்கு **6,300** பிசிஆர் பரிசோதனைக் கருவிகள்

மருத்துவமனை மற்றும் முன்னிலை ஊழியர்களுக்கு **27 மில்லியனுக்கும் மேலான** அறுவை சிகிச்சைக்குரிய, என்95, கேஎன்95 முகக்கவசங்கள்

“செயற்கை நுரையீரல்” இயந்திரங்கள் உட்பட, **30,000க்கும் மேலான** பிராணவாயு கருவிகள் மற்றும் தீவிர சிகிச்சை தரமுள்ள சுவாசமூட்டும் கருவிகள்



**கிருமித்தொற்றைக் கையாளும் முன்னிலைகளுக்குப் பொருட்கள் எடுத்துச்சென்று கொடுக்கப்பட்டன**

உலக உணவுத் திட்டத்திற்காக ஆசியாவுக்கும் பசிபிக் வட்டாரத்திற்கும் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை எடுத்துச்சென்று கொடுப்பதற்காக, தெமாசெக் அறநிறுவனம் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானச்சேவை நிறுவனத்துடன் கூட்டிணைந்து செயல்பட்டு, சுமார் 40 விமானப் பயணங்களுக்கு ஆதரவளித்தது

## ஒவ்வொரு வீட்டுக்கும் 1 ஆக்சிமீட்டர் இலவசம்

### விநியோகம் முடிவடையும் தேதி

கடைகள் மூடும் நேரம்

ஆகஸ்ட் 5 வியாழக்கிழமை

**இருப்பு நிறைய இருக்கிறது முந்த வேண்டிய அவசியமில்லை**



உங்களுக்கான **இலவச ஆக்சிமீட்டரைப்** பெற்றுக்கொள்ள **மீட்புக் கையேட்டை எடுத்துச் செல்லுங்கள்**

**மீட்புக் கையேடு** இல்லாமல் ஆக்சிமீட்டரைப் பெற்றுக்கொள்ள முடியாது

பெற்றுக்கொள்வதற்கான இடங்களை அறிய வருடுங்கள்
**stayprepared.sg/oximeter**

### எங்கே பெற்றுக்கொள்வது (தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே)

FairPrice, SHENGSIONG, Giant, Cold Storage, watsons, Unity, guardian

**1800 738 2000** தினமும் காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை (பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து)

oximeter@temasekfoundation.org.sg

உங்களுக்காக வழங்குவோர்: STAY PREPARED, TEMASEK FOUNDATION

பங்களிப்பாளர்கள்: Singapore POST, SPgroup

## தெமாசெக் அறநிறுவனம் வலுவான சமூகங்களை உருவாக்குகிறது

சிங்கப்பூரிலும் அதற்கு அப்பாலும் மக்களை இணைத்து, சமூகங்களுக்குக் கைகொடுத்து, நம் பூமியைப் பாதுகாத்து, ஆற்றல்களை வளர்க்க முனைப்புடன் செயல்படுகிறோம்

### இளையர் செயல்முனைப்புத் திட்டம்



மேன்மேலும் பரிவுமிக்கச் சமுதாயத்தை உருவாக்குவதற்கான மாற்றங்களை வழிநடத்திச்செல்ல இளையர்களுக்குத் துணை புரிகிறது

### மீள்திறனும் ஊக்கமும் கொண்ட குடும்பங்களை உருவாக்கும் தெமாசெக் அறநிறுவனத் திட்டம்



பச்சிளம் குழந்தைகள், அவற்றின் தாய்மார்கள் ஆகியோரது உடல்நலனைக் காக்கவும் வளர்ச்சிக்குத் துணை புரியவும் இளம் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கிறது

### நீடித்து நிலைக்கத்தக்க உணவு தயாரிப்பு



உயிரணுவை அடிப்படையாகக் கொண்ட நீடித்து நிலைக்கத்தக்க செய்முறைகளைப் பயன்படுத்தி ஆராய்ச்சிக்கூடத்தில் பால் பொருட்களைத் தயாரிப்பதற்காக TurtleTree-க்கு நிதியளிக்கப்பட்டது

### ஆசியான் பரிசு 2020



ஆசியான் நாடுகளுக்கு இடையில் கூட்டு முனைப்புகளை ஊக்குவிக்கிறது

### Lexicaid – வாசிக்க துணைபுரியும் செயலி



டிஸ்லெக்சியா எனும் வாசிப்புக் குறைபாடு உள்ள பிள்ளைகள் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ளவும், சொந்தமாகக் கற்றுக் கொள்ளவும் உதவுகிறது